# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2273/79 - 2022 අප්‍රේල් මස 01 වැනි සිකුරාදා - 2022.04.01

*2273/79 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை**

மேலதிக துணைவிதியை ஏற்றுக் கொள்ளல்

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் (நியமத் துணை விதிகள்) சட்டம் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2022 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 10 ஆந் திகதி பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் கீழ்க்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

**சுப்பிரமணியம் சுரேன்,**
தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை,
*2022*, பங்குனி *28.*

**2022.03.10 ஆந் திகதிய 16 ஆம் இலக்க, தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது விதியின் (1) ஆவது உபபிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணை*

*விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆவது உபபிரிவின் கீழ், வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின்படி, வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2018.05.09 ஆந் திகதிய 2070/11 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு வடக்கு மாகாண சபையால் 2018.09.11 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2018.10.08 ஆந் திகதிய 2092/06 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான அத்தியாயம் 7-9 வரையான வடக்கு மாகாண பிரதேச சபைகளுக்கான துணைவிதிகளில் கூறப்பட்டவற்றை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியில் இருந்து ஏற்றுக்கொள்வது என்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை பகுதிகளில் நடைமுறைப்படுத்துவது என்றும் மேலே கூறப்பட்ட 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க (அத்தியாயம் 261) நியமத் துணைவிதிகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உபபிரிவின் கீழ் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் சபையினரால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.*

EOG 04-0002

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*